Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.352/2020

**Depositions of PW- 1**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.அந்தோணி செல்வி | Occupation | ஆசிரியை |
| Husband name | கனகராஜ் | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of February 2026.

05.02.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் ஆசிரியராக வேலை செய்து வருகிறேன். கடந்த 02.03.2019 ம் தேதி திருவில்லிபுத்தூர் இந்திரா நகர் மாதா கோவில் திறப்பு விழா நடந்தது. பூஜைக்கு பின் சம பந்தி நடந்தது. அப்போது கூட்டமாக இருந்தது. அப்போது வயதான பாட்டியின் செயின் காணாமல் போனதாக ஒலிப்பெருக்கியின் மூலம் அறிவித்தனர். நானும் எனது செயினை பார்த்தபோது காணாமல் போயிருந்தது. 3 1/4 பவுன் கேரளா பேன்சி மாடல் செயின் ரூ.32500/–. நான் தேடி பார்த்தும் செயின் கிடைக்காததால் அன்று வீடு சென்று எனது கணவரிடம் சொல்லிவிட்டு மறுநாள் 03.03.2019 அன்று எனது கணவருடன் சென்று இது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள செயின் என்னுடையதுதான். **புகைப்படம் சாபொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சிறிது நாட்களுக்கு பிறகு போலீசார் என்னை தொடர்பு கொண்டு காவல்நிலையம்

வரசொன்னார்கள். நான் சென்று போலீசாரிடம் எனது செயினை அடையாளம் காட்டினேன். பின்னர் நீதிமன்றத்தில் மனு செய்து எனது செயினை பெற்றுக்கொண்டேன். சம்பவம் நடந்து 7 வருடங்கள் ஆனதால் ஆஜர் எதிரியை சரியாக நியாபகமில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

மேற்படி 02.03.2019 அன்று புனித வேளாங்கண்ணி ஆலயத்தின் திறப்பு விழா என்பதால் சம்பவயிடத்தில் சுமார் 200 க்கும் மேற்பட்ட நபர்கள் இருந்தார்கள். மேற்படி ஆலயத்தின் திறப்பு விழா என்பதால் வெளியூரிலிருந்தும் நிறைய நபர்கள் அன்று வந்திருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆலயமானது சிறிய ஆலயம் தான் என்றால் சரிதான். அதனால் மேற்படி தேதியில் கூட்ட நெரிசல் அதிகமாக இருந்தது என்றால் சரிதான். எனது நகை காணாமல் போன அன்று வேறு எத்தனை பேருடைய நகை காணாமல் போனது என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் மற்றொரு பாட்டியின் நகை காணாமல் போனதாக கேள்விப்பட்டேன். அவர் பாட்டக்குளத்தை சேர்ந்தவர் என்றும் கேள்விப்பட்டேன்.

மேற்படி காணாமல் போன நகை என்னுடையதுதான் என்பதற்கான ஆவணங்களை காவல்நிலையத்தில் கொடுத்தேனா என்றால் புகார் கொடுக்கும்போதே மேற்படி நகையின் ரசீதை காவல்நிலையத்தில் கொடுத்தேன். மேற்படி நகை காணாமல் போனதாக புகார் கொடுத்து எத்தனை மாதங்கள் கழித்து போலீசார் நகையை கண்டுபிடித்து விட்டதாக என்னை காவல்நிலையத்திற்கு அழைத்தார்கள் என்றால் சுமார் 10 மாதங்கள் கழித்து காவல்நிலையத்திற்கு வருமாறு கூறினார்கள். நான் காவல்நிலையம் சென்றபோது போலீசார் எனது நகையுடன் மற்ற சில நகைகளையும் வைத்து என்னை அடையாளம் காட்ட சொன்னார்களா என்றால் நான் சென்றபோது மற்ற நகைகளையும் வைத்திருந்தார்கள் அதில் நான் எனது நகையை அடையாளம் காண்பித்தேன்.

எனது நகை அறுந்த நிலையிலிருந்தது. மற்ற நகைகள் எந்த நிலையிலிருந்தது என்றால் அதை நான் கவனிக்கவில்லை.மேற்படி நகை காணாமல் போனதாக நான் கூறிய மற்றொரு பாட்டியும் புகார் கொடுக்க சென்றபோது வந்திருந்தாரா என்றால் நான் புகார் கொடுத்த அன்று தான் அவரும் வந்து புகார் கொடுத்தார். நான் நகையை அடையாளம் காட்ட சென்ற அன்று மேற்படி பாட்டியும் வந்திருந்தாரா என்றால் நான்

பள்ளி வேலைகளை முடித்துவிட்டு சென்றதால் அந்த சமயத்தில் வரவில்லை. நான் நகையை அடையாளம் காட்ட சென்றபோது வேறு பெண்கள் யாரையும் காவல்நிலையத்தில் அமரவைத்திருந்தார்களா என்றால் அதுபற்றி தற்போது எனக்கு நியாபகமில்லை. நான் நீதிமன்றத்திலிருந்து பெற்று சென்றது எனது நகையில்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.352/2020

**Depositions of PW- 2**

| Name | திரு.ஆஞ்சே | Occupation | மெக்கானிக் வேலை |
|---|---|---|---|
| Father's name | சேவியர் | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of February 2026.

05.02.2026

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை

நான் தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள 2 வது கையெழுத்துக்கள் என்னுடையதுதான். கடந்த 26.11.2019 அன்று நானும் தமிழரசன் என்பவரும் சர்ச் அருகில் பேசிக்கொண்டிருந்தபோது போலீசார் ஒருவரை விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அந்த நபர் யார் என்று எனக்கு நியாபகமில்லை. போலீசார் என்னிடம் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள். இவ்வழக்கு சம்மந்தமாக வேறு ஒன்றும் எனக்கு தெரியாது. **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து அசாஆ.2 மற்றும் அத்தாட்சியிலுள்ள 2 வது கையெழுத்து அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் போலீசார் விசாரணையின்போது 26.11.2019 ம் தேதி காலை 10.00 மணியளவில் திருவில்லிபுத்தூர் டு சிவகாசி ரோட்டிலுள்ள சர்ச் முன்பாக நானும் தமிழரசன் என்பவரும் நின்று பேசிக்கொண்டிருந்தபோது போலீசார் சந்தேகத்தின் அடிப்படையில் அங்கும் இங்கும் சென்று கொண்டிருந்த ஆஜர் எதிரியை பிடித்து விசாரித்தபோது அவர் முன்னுக்குப் பின் முரணாக சொன்னார் என்றும் எதிரியை எங்கள் முன்பாக கைது செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் பதிவு செய்தார்கள் என்றும் எதிரி திருடிய பொருட்களை மகாலட்சுமி என்பவரிடம் கொடுத்த அடகு வைத்திருப்பதாகவும் எதிரியை அழைத்து சென்றால் அடையாளம் காட்டுவதாக சொன்னதன் பேரில் போலீசாருடன் நானும் தமிழரசனும் மற்றும் ஆஜர் எதிரி ஆகீயோர்கள் சென்றபோது மகாலட்சுமியை அடையாளம் காட்டினார் என்றும் அவர் எடுத்து ஆஜர் செய்த 3 1/4 பவுன் எடையுள்ள டாலருடன் கூடிய பேன்சி மாடல் தங்க செயின் அறுந்த நிலையில் இருந்ததை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார்கள் என்று கூறிவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதால் அவருக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.